செ.வெ.எண்: 72 நாள்: 28.06.2016

## பொதுமக்கள் அனைவரும் குடிநீரின் தரத்தினை அறிந்து தூய்மையான குடிநீரை பருக வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.06.2016) நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு குடிநீரின் தன்மையில் ஏற்படும் பாதிப்பினை பொதுமக்கள் முன்னிலையில் பரிசோதித்து அவர்கள் பருகும் நீரின் தன்மையை உணர்த்த குடிநீர் பாதுகாப்பு வாரம் என்ற முகாமை இந்தியாவிலேயே முதல் முறையாக 2014 முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் 2016ம் ஆண்டிற்கான தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு நமது மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் "பெறுவோம், பெறுவோம் மாசற்ற நீரை பெறுவோம், பருகுவோம், பருகுவோம் தூய்மையான நீரை பருகுவோம், அறிவோம், அறிவோம் குடிநீரின் தரத்தை அறிவோம், காப்போம், காப்போம் குடிநீரின் தரத்தை காப்போம், மதிப்போம், மதிப்போம் மழைநீரை மதிப்போம், நீக்குவோம், நீக்குவோம் நீரில் கிருமிகளை நீக்குவோம், தவிர்ப்போம், தவிர்ப்போம் தரமற்ற நீரை தவிர்ப்போம், முயல்வோம், முயல்வோம் நீரின் தரம் உயர்த்த முயல்வோம், வெல்வோம், வெல்வோம் நோய்க்கிருமிகளை வெல்வோம், சூளுரைப்போம், சூளுரைப்போம் மழைநீர் நமது உயிர்நீர் என சூளுரைப்போம், ஏற்போம், ஏற்போம் வையகம் காக்க சபதம் ஏற்போம்" என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவிகள் கலந்து கொண்டனர்.

இப்பேரணி பொது அலுவலக வளாகத்தில் தொடங்கி அண்ணாசிலை, கீழராஜவீதி, பிருந்தாவனம் கார்னர் வழியாக நகர்மன்ற வளாகத்தை சென்றடைந்தது. இதன் மூலம் பொதுமக்கள் குடிநீரின் தரம் பற்றிய விழிப்புணர்வை பெற்றும், தரமற்ற குடிநீரினால் பரவக்கூடிய நோய்கள் பற்றி மக்கள் அறிந்து கொள்வதுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டு அனைத்து கிராம பஞ்சாயத்துக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள நீர் தரப்பரிசோதனைப்பெட்டியின் மூலம் இலவசமாக குடிநீர் பரிசோதனை செய்து பொதுமக்கள் குடிநீரின் தரத்தை அறிந்து தூய்மையான நீரை பருகி நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இப்பேரணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப்பொறியாளர்கள் திரு.சிவமணி, திரு.பேச்சியப்பன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**